**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

முன்னிலை : திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ம் நாள் வியாழக்கிழமை.

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் மார்கழித் திங்கள் 7 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 2/ 2022**

**இன்**

**அசல் வழக்கு எண் 9/2018**

சித்திநயிமா ... மனுதாரர் /வாதி

/ எதிர்/

1. முகமது இக்பால்
2. பரக்கத்துனிசா
3. நஜ்ரீன் பானு
4. யாஸ்மின் பானு

(2 முதல் 4 எதிர்வாதிகள் ஐ.ஏ.எண். 476/2021ம்
தேதிய உத்தரவுப்படி தரப்பினர்களாக
சேர்க்கப்பட்டுள்ளனர்) ... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனு 13.12.2022-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. கே. பழனிவேலு மற்றும் திரு. பி. பிரதீப் மாரிஸ் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே. மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

Sd/- M. Ravichandran

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14ன்படி மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தை காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்: -</u>**

மனுதாரர் தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து வடுபறித்து செப்டிக்டேங்க் மற்றும் எந்தவிதமான கட்டுமானங்களும் கட்டக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தொடர்ந்துள்ளார் என்றும், இவ்வழக்கில் தற்போது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் ஆவணம் பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வரும் அ.வ.எண். 3/2010 ல் இருந்து வந்ததாலும், இதர ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்கள் என்பதால் எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையை படித்தபின்பே தெரிய வந்ததாலும் மனுதாரரால் மனுவில் கண்ட ஆவணங்களை வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே மனுவுடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஏற்றுக்கொண்டு மனுதாரரின் கட்சியை கேட்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவாக வேண்டியது அவசியமாகவும், நியாயமுமாக இருக்கிறது என்றும், இம்மனு ஏற்கப்படாத பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத வீண் கஷ்டமும், நஷ்டமும் ஏற்படஏதுவாகும் என்றும், எனவே மனுதாரரின் மனுவை அனுமதிக்க வேண்டும் என கோரியுள்ளார்.

Sd/- M. Ravichandran

**<u>3. எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்: -</u>**

இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் 1-வது ஆவணம் அசல் வழக்கு எண். 3/2010 ல் இருந்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு 2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அப்பொழுதே சான்று நகல் வாங்கி தாக்கல் செய்திருக்க முடியும் என்றும், 2 முதல் 5 ஆவணங்கள் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் என்பதால் எதிர்வழக்குரையை படித்த பின்பே தெரிய வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும், இந்த எதிர்மனுதாரர்களால் எதிர்வழக்குரை 03.08.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நான்கு ஆண்டுகள் காலதாமதாக 2 முதல் 5 ஆவணங்களை தற்சமயம் வழக்கு விசாரணைக்கு வந்த பின்பு நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், வழக்கு லிஸ்டில் விசாரணைக்கு வந்த பின்பு வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மனுதாரரால் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், காலதாமதத்திற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் சரியல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்".

Sd/- M. Ravichandran

**6. தீர்வு:-**

இருதரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கை மனுதாரர் /வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து கட்சியாடி வந்து வாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக பட்டிலில் இடப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணைக்கு வாய்தா எழுந்த நிலையில், ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர்/வாதி அவரது பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், மனுதாரர் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுமென கோருவது ஏற்கத்தக்கது என்றும், மனுதாரருக்கு அசல் வழக்கில் அவரது கட்சியை நிரூபிக்க வாய்ப்பு வழங்கி, அவரது கட்சியை அறிந்து வழக்கு விசாரணை மேற்கொண்டால்தான் அசல் வழக்கின் தீர்விற்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும், ஆகையால் மனுதாரரால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்யக்கோருவது நீதியின் நலன் கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் போதிய வாய்ப்பு வழங்கினால் தான் அசல் வழக்கின் தீர்வுகளுக்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் மனுதாரர் தாக்கல்

Sd/- M. Ravichandran

செய்துள்ள ஆவணங்கள் "Subject to proof and relevancy" அடிப்படையில் நீதியின் நலன் கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது,

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

Sd/- M. Ravichandran

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

<u>இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u> இல்லை

Sd/- M. Ravichandran

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

Sd/- M. Ravichandran